Register No. | | | | | | | | |

# TA6A

5881-23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

## HUMAN RIGHTS LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the different theories of human rights.

மனித உரிமைகளின் பல்வேறு கோட்பாடுகளை விளக்குக.

2. Write an essay on the contribution of UNO to human rights.

மனித உரிமைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பங்கு குறித்து ஒரு கட்டுரை வரைக.

3. Explain the composition of National Human Rights Commission.

தேசீய மனித உரிமைகள் ஆணையத்தின் அமைப்பை விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Trace the evolution of Human Rights

மனித உரிமைகளின் பரிணாம வளர்ச்சியினை வரைக.

5. Give an account of problems faced by the Refugees in world.

உலகத்தில் அகதிகள் சந்திக்கும் பிரச்சனைகளை தொகுத்தெழுதுக.

6. Discuss the human rights principles contained in the Indian Constitution.

இந்திய அரசமைப்பில் அடங்கியுள்ள மனித உரிமைகள் கோட்பாடுகளை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Magna Carta

பேருரிமைப் பத்திரம்

(b) Female Infanticide Prevention Act.

பெண் சிசு கொலை தடுப்புச் சட்டம்

(c) Right to work

வேலை செய்யும் உரிமை

(d) Rights of the prisoners

கைதிகளின் உரிமைகள்

(e) Torture

சித்திரவதை

(f) Abolition of untouchability

தீண்டாமை ஒழிப்பு

(g) Bill of Rights.

உரிமைகள் சட்டவரைவு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A large number of Chakma migrants crossed over the borders of Bangladesh and entered into India. Most of them settled in Assam and Tripura but latter on they were moved to the state of Arunachal Pradesh. An agitation was launched by the All Arunachal Pradesh Students Union to expel them out of the state. The National Human Rights Commission approached the Supreme Court for appropriate directions. Decide the case in the light, of the provisions of UNHCR.

வங்க தேசத்திலிருந்து புலம் பெயர்ந்த அதிக அளவிலான சக்மா இன மக்கள் இந்தியாவிற்குள் நுழைந்தனர். அவர்களில் அதிகமானோர் அசாம் மற்றும் திரிபுராவில் குடியேறினர். ஆனால், பின்னர் அவர்கள் அருணாசல பிரதேசத்திற்கு மாறினர். அனைத்து அருணாசல பிரதேச மாணவர் கூட்டமைப்பு அவர்களை தங்கள் மாநிலத்தை விட்டு வெளியேற்ற வேண்டும் என கிளர்ச்சி செய்தனர். தேசீய மனித உரிமைகள் ஆணையம் தகுந்த வழிகாட்டுதல் கேட்டு உச்ச நீதிமன்றத்தை அணுகியது. இவ்வழக்கை ஐக்கிய நாட்டின் அகதிகளின் உயர் ஆணையக வகையங்களின் துணை கொண்டு தீர்மானிக்கவும்.

9. Mr. A, is a Pakistani national and he overstayed his visa in India. He seeks the status of refugee in India. His petition was rejected and he was arrested and prosecuted for unauthorized stay under the Indian Foreigners Act. He approaches the Supreme Court by invoking Writ of Habeas Corpus under Art.32 of the Constitution. Decide.

திரு. அ என்ற பாகிஸ்தான் நாட்டைச் சார்ந்தவர் இந்தியாவில் தன்னுடைய சான்றுரிமைக் குறிப்பின் (விசா) வரம்பு கடந்து தங்கியிருந்து தனக்கு அகதி நிலை கோருகின்றார். இந்திய அயல்நாட்டார் சட்டத்தின் கீழ் அவருடைய மனு மறுத்துவிடப்பட்டு மற்றும் அவர் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக அனுமதியற்ற தங்கியிருப்பிற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. திரு. அ அரசமைப்புச் சட்டம் உறுப்பு 32ன் கீழ் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை வேண்டி உச்ச நீதிமன்றத்தை அணுகினார். தீர்மானிக்கவும்.

10. State Y without notice evicts an indigenous group N from a forest area, citing reasons of research and development. X, as a matter of protest approach the courts on the ground of violating their right to preserve their culture and right to prior informed consent. Decide.

நாட்டுப் பழங்குடி சார்ந்த ‘உ’ என்ற குழுவை ‘ஊ’ நாடு அறிவிக்கை கொடுக்காமல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி என்ற காரணங்களுக்காக காட்டு நிலப்பரப்பில் இருந்து வெளியேற்றியது. ‘உ’, அவர்களுடைய பண்பு வளத்தை காப்பாற்றும் உரிமை மற்றும் முந்திய அறிவிக்கப்பட்ட உடன்பாட்டிற்கான உரிமை ஆகியவை மீறப்பட்ட காரணத்திற்காக அதற்கு கண்டனம் தெரிவிக்க நீதிமன்றங்களை அணுகினர். தீர்மானிக்கவும்.

Register No. | | | | | | | | |

# TA6B

5867-23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

## CRIMINOLOGY AND PENOLOGY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ LIBRARY ★

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain Freud's concepts of id, ego and super ego.

   ஃபிராயிடின் அடிமனம், வெளிமனம், மனச்சாட்சி மனம் பற்றிய கருத்துக்களைப் பற்றி விளக்குக.

2. Discuss about the nature and extant of victimization.

   பாதிப்புக்குள்ளாக்குவதின் தன்மையையும் எல்லையையும் விவாதிக்கவும்.

3. Explain about various schools of criminology.

   குற்றவியல் குழு பற்றிய பல்வேறு கோட்பாடுகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Critically evaluate the abolition and retention of death penalty in India.

   இந்தியாவில் மரண தண்டனையை ஒழித்தலையும் வைத்திருந்தலையும் பற்றி திறனாய்வு செய்க.

5. Explain about Pennsylvanian Prison system.

   பென்ஸில்வேனியன் சிறை அமைப்பு பற்றி விவரி.

6. "Economy influences the commission of crime"-Explain.

   "பொருளாதாரம் குற்றம் புரிதலுக்கு ஏதுவாகிறது"-விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Juvenile Justice Board

இளைஞர் நீதி நலவாரியம்

(b) Admonition

கண்டித்து விட்டுவிடுதல்

(c) Recidivism

தொடர் குற்றம்

(d) Holy three of criminology

குற்றவியலின் புனித மூவர்

(e) Parole

பரோல்

(f) Santhanam Committee Report

சந்தானம் குழு அறிக்கை

(g) Theories of punishment.

தண்டனை கோட்பாடுகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Raman without Kannan's authority affixes Kannan's seal to a document purporting to be a conveyance of an estate from Kannan to Raman with the intention to sell the estate to Murugan and thereby of obtaining from Murugan the purchase money. Raman has committed offence under which law and section?

கண்ணனிடம் இருந்து இராமனுக்கு ஒரு சொத்தை மாற்றுவதாகப் புலப்படும் ஒரு பத்திரத்தில் அந்த சொத்தை முருகனுக்கு விற்று அதன் மூலம் விற்பனைத் தொகையைப் பெற்றுக் கொள்ளும் உட்கருத்துடன் கண்ணனின் உத்தரவின்றி இராமன் கண்ணனின் முத்திரையை இடுகிறார். இராமன் ஏதேனும் குற்றம் புரிகிறாரா, எந்தச் சட்டம் மற்றும் பிரிவின்கீழ்?

9. 'A', who is a citizen of India, commits a murder in Uganda. Where can he be tried and convicted?

இந்தியக்குடிமகனான 'அ' என்பவர் உகாண்டாவில் ஒரு கொலையைச் செய்கிறார். அவர் எந்த இடத்தில் விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கப்படலாம்.

10. 'B' goes to the roof of a house with help of a ladder. 'A' quietly removes the ladder. What offence has 'A' committed?

'B' வீட்டின் கூரை மீது ஏணியின் துணையோடு ஏறுகிறார். 'A' சத்தமின்றி ஏணியை எடுத்து விடுகிறார். 'A' என்ன குற்றம் புரிந்துள்ளார்?

---

Register No. | | | | | | | | |

# TA6C

**5868–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

L.L.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

INTELLECTUAL PROPERTY LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ LIBRARY ★

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the procedure to be followed for the registration of a trademark.

   ஓர் வணிக முத்திரையினைப் பதிவு செய்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை விளக்குக.

2. Define copyright. Discuss the various rights available to the author of the copyright in the Copyright Act.

   பதிப்புரிமை என்பதனை வரையறு. பதிப்புரிமை சட்டத்தில், பதிப்பாசிரியருக்குண்டான பல்வேறு உரிமைகளை விவாதிக்கவும்.

3. Describe the grounds for granting compulsory license under the Indian Patents Act, 1970.

   இந்திய காப்புரிமைச் சட்டம் 1970-ன் படி கட்டாய உரிமம் பெறுவதற்கான காரணிகளை விளக்கமாகக் கூறவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the impact of TRIPS agreement on India's Intellectual property law.

   இந்திய அறிவுசார் சொத்துரிமை சட்டங்களின் மீது டிரிப்ஸ் உடன்படிக்கையின் தாக்கத்தை பற்றி விளக்குக.

5. What designs are registerable and what are the conditions for registration of a design?

   பதிவு செய்யத்தக்க வடிவமைப்புகள் என்ன? மேலும் வடிவமைப்பினை பதிவு செய்வதற்கான கட்டுப்பாடுகள் யாவை?

6. Explain the grounds for refusal of registration of trademark under the Trade Marks Act, 1970?

வணிகக் குறியீடு சட்டம் 1970ன் கீழ், எந்தக் காரணங்களுக்காக வணிகக் குறியீடுகளை பதிவு செய்வதற்கு மறுக்க இயலும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Term of Patent

காப்புரிமை காலம்

(b) Monopoly right

பிரத்யேக உரிமை

(c) Passing-off

வணிகப்போலி

(d) Infringement of Industrial Design

தொழிலக வடிவமைப்பு-உரிமை மீறல்

(e) WIPO-World Intellectual Property Organisation

உலக அறிவுசார் சொத்துரிமை மையம்

(f) Collective Trade Mark

கூட்டு வணிகக் குறியீடு

(g) Revocation of lapsed patent.

காலாவதியான காப்புரிமையை திரும்பப் பெறுதல்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ram made an application for registration of trademark Medimax before the trade mark registry. Anand is the opponent who was the registered proprietor of trademark "Medimaxx" and he pleaded rejection on the ground of deceptive similarity. Can Ram succeed? Decide?

ராம் என்பவர் வணிக குறியீடு பதிவு துறையில் "Medimax" என்னும் வணிக முத்திரையினை பதிவு செய்ய வேண்டும் என விண்ணப்பம் செய்கிறார். ஆனந்த் என்னும் எதிர் மனுதாரர் "Medimaxx" என்னும் வணிக முத்திரையின் பதிவு பெற்ற நபர் இதை ஒத்த தன்மையுடையது என நிராகரிக்க வேண்டுகிறார். ராம் வெற்றி பெற இயலுமா? முடிவு செய்க?

9. Nila a law student, has downloaded an article written by famous Supreme Court Judge and extracted certain portion of that work for making fair comment. Decide whether Nila has committed any Copyright-Infringement.

நிலா ஓர் சட்ட மாணவர். அவர் புகழ்மிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி எழுதிய கட்டுரையைப் பதிவிறக்கம் செய்து அதில் சில பகுதிகளை நேரிய கருத்துரைக்காக பயன்படுத்தினார். இந்த நிகழ்வில் நிலா பதிப்புரிமை மீறுகை புரிந்துள்ளாரா என்று தீர்மானிக்கவும்.

10. Rajan, a registered proprietor of design alleges that Rajesh by unauthorisedly applying his said design has gained substantially. Discuss the remedies to Rajan under the Designs Act, 2000.

“ராஜன்” என்பவர் ஒரு பதிவு பெற்ற வடிவமைப்பின் உரிமையாளர் “ராஜேஸ்” என்பவருக்கு எதிராக, தனது வடிவமைப்பை “ராஜேஸ்” என்பவர் சட்ட விரோதமாக பயன்படுத்தி பயன் அடைந்துள்ளார் எனக் குற்றம் சுமத்துகிறார். “ராஜன்” என்பவருக்கு வடிவமைப்புச் சட்டம் 2000-ன் கீழ் கிடைக்கக் கூடிய தீர்வழிகள் என்ன என்பதனை விவரிக்கவும்.

---